රාජ්‍යසේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of PublicServices, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்தசேவைகள்பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය/ෆැක්ස් | ෆැක්ස් | විද්‍යුත් තැපෑල | වෙබ් අඩවිය |
|---|---|---|---|
| தொலைபேசி:**(94) 011- 2694560** | தொலைநகல்:**(94) 011- 2692254** | மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk** | இணையத்தளம்: **www.pubad.gov.lk** |
| Telephone | Fax | E-mail | Web Site |


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/01/11 | ඔබේ අංකය<br>உமதுஇல<br>Your No | |
| දිනය<br>திகதி:<br>Date | 2022.01.03 | | |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான ஆவணங்களை இணைந்த சேவைகள் பிரிவுக்கு அனுப்பி வைத்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக எனது இணையிலக்கம் மற்றும் 2017.08.14 ஆந் திகதிய கடிதம் தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

02. இணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிறுவன விடயங்கள் தொடர்பாக நாளாந்தம் பெருந்தொகையான ஆவணங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரிவுக்கு அனுப்பப்படுவதுடன், அவ்வாறு அனுப்பப்படும் பெருந்தொகையான ஆவணங்களில் உத்தியோகத்தரின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டு அனுப்பப்படுவதால் அந்த ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தேவையற்ற நேரத்தை செலவிட வேண்டி ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

03. எனவே, அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகளுக்கான ஆவணங்களை அனுப்பும் போது, கட்டாயமாக CS/DOS/XXXX என்ற உத்தியோகத்தரின் நியமன இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பும் படி கேட்டுக்கொள்வதுடன், அவ்வாறு குறிப்பிடாது 2022.01.20 ஆந் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கப் பெறும் ஆவணங்களை நியமன இலக்கத்தை குறிப்பிட்டு எமக்கு அனுப்பி வைப்பதற்காக திருப்பி அனுப்ப நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

04. இணைந்த சேவையைச் சேர்ந்த 75,000 க்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர் என்பதுடன், அவர்களின் நிறுவனச் செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்கு அனைவரதும் உதவியை

எதிர்பார்ப்பதுடன், ஆவணங்களை அனுப்பும் போது உத்தியோகத்தரின் நியமன இலக்கத்தை கட்டாயமாக சரியாகக் குறிப்பிட்டு அனுப்புமாறும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்பும் போது சேவைத் தேவைக்கு ஏற்ப அவசியமான ஆவணங்களின் பிரதிகளை மட்டுமே அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்